செய்தி வெளியீடு எண்: 767 நாள்: 20–12–2011.

பத்திரிக்கை செய்தி

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் செயல்பாடு குறித்து 20.12.2011 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை, முதன்மைச் செயலாளர் மற்றும் நிலச்சீர்திருத்தத் துறை ஆணையர், அனைத்து மாவட்ட தனித்துணை ஆட்சியர்கள் (சமூகபாதுகாப்புத் திட்டம்) மற்றும் இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு அலுவலர்களாக நியமிக்கப்பட்ட உதவி ஆணையர்களுடன் (நிலச்சீர்திருத்தம்) ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு 16.12.2011 வரை 69,92,434 அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 6,72,679 அடையாள வில்லைகளை வழங்கவும், கணக்கெடுப்புப் பணி முடித்து அடையாள அட்டை வழங்கும் பணியினை துரிதமாக மேற்கொள்ளவும் அனைத்து மாவட்ட தனித்துணை ஆட்சியர்களுக்கு (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அறிவுரைகள் வழங்கப்பட்டன. திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பல்வேறு உதவித் தொகைகளை குறித்து விவரமாக ஆய்வு செய்யப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன. இந்த நிதி ஆண்டில் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு மாவட்ட வாரியாக ஆய்வு செய்யப்பட்டு இதனை துரிதப்படுத்த மாவட்ட துணை ஆட்சியர்களுடன் மீண்டும் ஒரு ஆய்வுக்கூட்டம் ஜனவரி முதல் வாரத்தில் நடத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஒப்பம்/ ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப.
முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.